DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.90/2024**

Deposition of witness for Prosecution அ.சா.6

Name : பாபு
Father/ Husband Name : தர்மராஜ்
Village :
Taluk :
Calling :
Age :

3வது எதிரி ஆஜர்.1,2,4வது எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 22.01.2026.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுகிறேன். கடந்த 08.08.2018 தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது அ.சா.1 பஞ்சவர்ணம் கொடுத்த எழுத்துபூர்வமான புகாரை பெற்று குற்ற எண்.194/2018 இ.த.ச. பிரிவுகள்.341,294(b),323,506(1),379 ன் படி முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) .** பின்பு சம்பவ இடத்திற்கு அன்றைய தினம் 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று மணி, கணேசன் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சம்பவ இடத்தில் கையெழுத்து பெற்றேன். **(மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ5 மற்றும் 6ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**பின்னர் பட்டியல் சாட்சிகள் 1முதல் 6 சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் எதிரிகளை தேடி 3வது எதிரியை கடந்த 09.08.2018 15.00மணிக்கு சருகணி விளக்கில் வைத்து காரணம் கூறி கைது செய்து காவல் நிலையம் கொண்டுவந்து உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி சமூக நீதிமன்ற காவல் அடைப்பிற்கு உட்படுத்தினேன். 1,2,4 எதிரிகள் மாண்புமிகு. சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில்

முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரண் அடைந்துவிட்டார்கள். பின்னர் காயம் பெற்றவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.வைரவசுந்தரம் அவர்களை விசாரித்து காயச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு எனது ரகசிய புலன்விசாரணையில் சம்பந்தபட்ட காயம்பட்ட நபர்கள் சம்பவ இடத்தில் செல்போன் மற்றும் பணம் திருடப்படவில்லை என்று சொன்ன வழக்கின் சட்டப்பிரிவில் 379 இ.த.ச வை நீக்கி இ.த.ச பிரிவுகள் 341, 294(b)323,506(1) வின் படி மாற்றம் செய்து சட்டப்பிரிவுகள் மாறுதல் அறிக்கையை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(மேற்படி சட்டபிரிவுகள் மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** பின்னர் வழக்கின் புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: (1,2,4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் இந்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

சம்பவ தேதிக்கு மறுநாள் தான் என்னிடம் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரை யார் எங்கு வைத்து எழுதினார்கள் என்றால் அ.சா.1 காவல் நிலையத்தில் வைத்து எழுதினார். காயம்பட்ட சரவணன் மற்றும் சாமிநாதன் ஆகியோரிடம் சிகிச்சையில் இருக்கும்போது விசாரித்து வாக்கு மூலம் பெற்றேனா என்றால் ஆமாம். சரவணனும் சாமிநாதனும் நான் விசாரிக்கும்போது எத்தனை நபர்கள் தாக்கியதாக சொன்னார்கள் என்றால் 4 நபர்கள் தாக்கியதாக சொன்னார்கள் . மருத்துவரிடம் சரவணனும் சாமிநாதனும் 3 நபர்கள் தாக்கியதாக சொன்னதாகதான் விபத்து பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த 3 நபர்கள் யார் என்று நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. மருத்துவரிடம் 3 நபர்களின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் தெரிந்த நபர் என்று தான் குறிப்பிட்டுள்ளார். சம்பவ இடமான அம்மாகண்ணு மண்டபத்திற்கும் தச்சவயல் கிராமத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 1/2 கி.மீ இருக்கும் . அம்மாகண்ணு மண்டபத்திற்கு எதிரே காயம்பட்ட சரவணன் வீடு இல்லை என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் சரவணன் மருத்துவரிடம் அம்மாகண்ணு மண்டபத்திற்கு அருகில் தன் வீட்டிற்கு முன் வைத்து தாக்கியதாக சொன்னதாக மருத்துவர் என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1க்கு

சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. புகாரில் காயம்பட்ட சரவணனையும் சாமிநாதனையும் கையாலும் கம்பாலும் அடித்ததாகதான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் காயம்பட்டவர்கள் மருத்துவரிடம் கம்பால் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர்கள் மருத்துவமனையில் சேர்ந்த பிறகுதான் என்னிடம் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் திருடப்பட்ட சொத்துக்களின் மதிப்புகளை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சரவணனுக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததாக விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. ஆனால் மருத்துவர் சரவணன் மது அருந்தியிருந்ததாகவும் சரவணனிடம் மது வாடை வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆமாம். 1 முதல் 3 எதிரிகள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள். அ.சா.1 க்கும் 1 முதல் 3 எதிரிகளுக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருப்பதாக விசாரணையில் தெரிந்துகொண்டேன். 3ஆம் எதிரி ஊரில் இருப்பதில்லை என்றும் திருப்பூரில் தொழில்செய்து வருகிறார் என்றும் என் விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை, சம்பவத்தன்று ஊரில் இருந்ததாக என் விசாரணையில் தெரியவந்தது. காயம்பட்டவர்கள் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார்கள் என்று விசாரணையல் தெரிந்துகொண்டேனா என்றால் இருவருமே 3 நாட்கள் சிகிச்சை பெற்றார்கள். 3ஆம் எதிரியை சருகணி விளக்கில் கைது செய்யவில்லை என்றும் திருப்பூரில் இருந்தவரை விசாரணை என்ற பெயரில் வரசொல்லி கைதுசெய்தேன் என்றால் சரியல்ல. அம்மாகண்ணு மண்டபத்திற்கு அருகில் உள்ள கடைகளை சேர்ந்தவர்களை தனி நபர் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட இருவரும் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது வாகனத்தை ஓட்டி சென்ற சரவணன் மது போதையில் ஓட்டியதில் வாகனத்தில் இருந்து இருவரும் விழுந்து ஏற்பட்ட காயங்களை வைத்து பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்து கையொப்பம் பெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

| |
|---|
| சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>S/d.D.Poornima,B.A.B.L.(Hons.)LL.M.,<br>குற்றவியல் நடுவர்,<br>தேவகோட்டை |